*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *ஆவிக்குரிய யுத்தம் - பகுதி 02*

*2 கொரிந்தியர் 10:1-6, உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்;கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். 2. எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக்குறித்து நான் கண்டிப்பாயிருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். 3. நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. 4. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 5. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். 6. உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயுமிருக்கிறோம்.*

*1. இரக்கம்*

*ஒரு திறமையான போர்ச்சேவகன் இரக்கமுள்ளவன்.*

*அவன் மற்றவர்கள் மீது இரக்கப்படுவான்.*

*நல்ல போர்ச்சேவகர்கள் அவசியப்படும்போது மட்டுமே தங்களுடைய கொடிய சக்தியை பயன்படுத்துவர்!*

*ஒரு நல்ல போர்ச்சேவகன் மென்மையானவனாகவும், கரிசணையுள்ளவனாகவும், மற்றவர்களின் இரத்தஞ்சிந்துதலை விரும்பாதவனாகவும் இருப்பான்.*

*ஒரு நல்ல போர்ச்சேவகன் பலமுள்ளவனாகவும் தைரியமுள்ளவனாகவும் இருக்கலாம். ஆனால் இது அவனுடைய இரக்கத்தினால் கட்டுப்படுத்தப்படவேண்டும். அப்போது தான், வேறு வழியே இல்லை என்கிற பட்சத்தில் அவற்றை பிரயோகிக்கமுடியும்.*

*வச. 1,* ***உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்;கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.***

*இந்த வேதப்பகுதி அவருடைய சிந்தனையில் ஒரு பிரிவை ஏற்படுத்துகிறது. இதுவே இவருடைய கடைசி பகுதி என்பதைக் காட்டுகிறது.*

*பவுல் காணிக்கையைக் குறித்து பேசி முடித்துவிட்டார். காணிக்கை என்பது தனிப்பட்ட காரியம். அவர் அதை ''தேவனுடைய விவரிக்கமுடியாத பரிசுக்காய் நன்றி'' என்று முடிவு ஆசீர்வாதம் சொல்லி முடித்துவிட்டார். அந்த கருத்தை முடிவுசெய்வதற்கு அதுவே சரியான வழி. தற்போது அவர் கடைசி காரியத்திற்கு வருகிறார்.*

*இந்த வேதப்பகுதி கடைசி பகுதிக்கான ஒரு அறிமுக வேதப்பகுதி.*

*அவருடைய அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.*

*தேவனுக்காய் பேசுகிற அவருடைய அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது.*

*அவருடைய அங்கீகாரம் தகர்க்கப்பட்டு, சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டது. அவருடைய அப்போஸ்தல அங்கீகாரம் தகர்க்கப்பட்டது.*

*அவர் நேர்மையாகவும் தேவனுடைய அதிகாரத்திலும் பேசுகிற அப்போஸ்தலர் என்பதை திருச்சபையிலிருந்த மக்கள் மறுஊர்ஜிதம் செய்தனர்.*

*அந்த மறுஊர்ஜிதத்தை மனதில் வைத்து, ''உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான்'' என்று கூறுகிறார். அவர் தன்னை சரியான அதிகாரத்தில் நிறுத்திக்கொள்ளுகிறார்.*

*இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் என்னும் தன்னுடைய அதிகாரத்தில் அவர் பேசுகிறார். தேவனையல்லாமல் யாரிடத்திலுமிருந்து அவர் அந்த அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியாது.*

*அவர் தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் பறைசாற்றும் தேவனுடைய ஸ்தானாதிபதி. அவர்கள் தற்போது அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட அதிகாரம் அவருடையது.*

*கள்ள பிரசங்கிமார்கள் எருசலேமிலிருந்து வந்த கடிதத்தை அடிப்படையாய் வைத்து தங்களுடைய அதிகாரத்தை சுதந்தரித்துக்கொண்டது போல, பவுல் அதிகாரத்தை எங்கும் தேடவேண்டிய அவசியம் இல்லை.*

***பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.***

*''பாராகளியோ'' என்ற வார்த்தை கெஞ்சுவது என்று அர்த்தங்கொள்கிறது.*

*இந்த கலகத்தை முடிக்கும்படிக்கு உங்களிடத்தில் கெஞ்சுகிறேன்.*

*மெய் சமாதானத்திற்காய் உங்களிடத்தில் கெஞ்சுகிறேன்.*

*அவர் இரத்தஞ்சிந்துதலை விரும்பவில்லை. வெளிப்படையான சண்டையை அவர் விரும்பவில்லை. கொலை செய்வதில் அவர் திருப்தியடையமாட்டார். அவர் இரக்கமுள்ளவர். அவர் பொறுமையாய் காத்திருந்தார். இன்னும் கொஞ்ச நேரம் காத்திருக்கப் போகிறார். அவர் மீண்டும் கடிதத்தை அனுப்பப்போகிறார். அதை அனுப்பிவிட்டு, அவர்களின் மனந்திரும்புதலுக்கு அவகாசம் கொடுத்து ஒரு சில மாதங்கள் காத்திருக்கப்போகிறார்.*

*நல்லப் போர்ச்சேவகன் தீய சிந்தனை இல்லாதவன். அவன் விஷம் மற்றும் வெறுப்பு இல்லாதவன். அவன் கோபத்தில் இருக்கமாட்டான்.*

*நல்லப் போர்ச்சேவகன் பழிவாங்குகிற எண்ணமற்றவன். அவன் இரக்கத்தில் முந்திக்கொள்பவன். அவன் சாந்தமும் தயவும் உள்ளவன்.*

*"சாந்தம்" என்ற வார்த்தை தாழ்மையையும், நற்சிந்தனையையும் குறிக்கிறது. தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை பொறுமையோடே கையாளவதையும் குறிக்கிறது.*

*தவறாய் நடத்தப்படும்போதும் தாழ்மையோடும் நற்சிந்தையோடும் இருப்பதைக் குறிக்கிறது. மென்மை என்பது அதற்கு நிகரான இணைச்சொல். அது தவறாய் நடத்தப்படும்போதும், அநீதியின்போதும், கனவீனப்படுத்தும்போதும், கோபமில்லால், தீங்கு விளைவிக்காமல், பழிவாங்காமல் பொறுமையுடன் இருப்பதைக் குறிக்கிறது.*

*அதற்கு சரிகட்டும் பலம் உங்களிடத்தில் இருந்தாலும், அதை நீங்கள் செய்யமாட்டீர்கள்.*

*கிறிஸ்துவைக் காட்டிலும் அந்த இரண்டு வார்த்தைகளையும் விவரிக்கும் நல்ல உதாரணத்தை நாம் காணமுடியாது.*

*இயேசு கிறிஸ்துவை விட வல்லமையுள்ளவர்கள் யாரும் இருக்கமுடியாது. இருப்பினும், அவரைக்காட்டிலும் அதை நேர்த்தியாய் பயன்படுத்தியவர்களும் யாரும் இருக்க முடியாது. அந்த வல்லமையை நேர்த்தியாய் கட்டுப்படுத்தியவரும் யாரும் இருக்கமுடியாது.*

*பாவத்தை மேற்கொள்வதற்கு இயேசு சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வல்லமையை தன் கட்டுக்குள் வைத்திருந்தார். ஆயினும் அவர் பொறுமையையும் காத்திருத்தலையும் கடைபிடித்தார்.*

*பவுல் சொல்லும்போது, "நான் தேவனைப்போல இருக்க விரும்புகிறேன். அவரைப் போலவே பொறுமையாகவும், மென்மையாகவும், சாந்தமாகவும், வல்லமையையும் அதிகாரத்தையும் கட்டுக்குள் வைத்திருக்கிறவராகவும் இருக்க விரும்புகிறேன். நீங்கள் என்னை தவறாய் நடத்தினாலும், என்னை இழிவுபடுத்தி எனக்கு விரோதமாய் திரும்பினாலும், எனக்கு எந்த கோபமோ, கசப்போ உங்கள் பேரில் இல்லை.*

*நீங்கள் என்னை கனவீனப்படுத்தி, என் பேரையும், தேவனையும், சுவிசேஷத்தையும் அவமானப்படுத்தினாலும் நான் உங்களோடு பொறுமையாய் இருக்கிறேன்." இதுவே ஒரு நல்ல போர்ச்சேவகனுடைய குணாதிசயம்.*

*இயேசுவே இதை கடைபிடித்தார்.*

***1 பேதுரு 2:19-21, ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். 20. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது***

***பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். 21. இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.***

*நீங்கள் அநியாயமாய் உபத்திரவப்பட்டு, அதைச் சகித்துக்கொள்வதை தேவன் விரும்புகிறார். அதற்கு சரிகட்டாமல், கோபங்கொள்ளாமல், வெறுக்காமல் நீங்கள் அவைகளை சகித்துக்கொள்வதை தேவன் விரும்புகிறார்.*

*பவுல் அப்போஸ்தலருக்கு நடந்த தீமைகளைப் போல, நீங்கள் தவறாய் நடத்தப்படும்போது, தவறாய் சித்தரிக்கப்படும்போது, உபத்திரவப்படும்போது, தாக்கப்படும்போது, குற்றஞ்சாட்டப்படும்போது நம்முடைய ஆவிக்குரிய நிலை ஸ்தாபிக்கப்படுகிறது. அவைகள் உங்களுக்கு நேரிடும்போது, அதற்கு சரிகட்டாமல் நியாயமாய் எதைச் செய்யவேண்டுமோ அதை மட்டும் செய்து, பொறுமையாய் பாடனுபவித்து, பொறுமையாய் அவைகளை சகிப்போமாகில், தேவன் நம்மில் பிரியப்படுவார்.*

*அவைகளை மேற்கொள்வது ஒரு கிறிஸ்தவனின் முக்கிய கடமை என்பதினால், எல்லாவற்றையும் நீங்கள் மேற்கொள்வதற்கு பழகிக்கொள்வீர்கள். நீங்கள் அவைகளை எதிர்பார்க்கவேண்டும்.*

*நீங்கள் கலாச்சாரத்தை எதிர்த்து வாழ்கிறீர்கள். இந்த பூமியில் அந்நியராய் வாழ்கிறீர்கள். இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தும் உங்களுக்கு விரோதமானது. அநீதியான உபத்திரவத்தை அனுபவிக்க நீங்கள் அழைக்கப்படலாம். சரியானதை செய்ததற்காய் நீங்கள் துன்பப்படுத்தப்பட்டு உபத்திரவத்தை அனுபவிக்கலாம். அவைகளை இந்த சமுதாயம் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு கோணங்களில் உங்களுக்குக் கொடுக்கலாம்.*

*இந்த நோக்கத்திற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.*

***யாக்கோபு 1:2-4, என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, 3. உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். 4. நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.***

*கிறிஸ்துவும் பாடனுபவித்திருக்கிறார். நம்மை மீட்பதற்கு மட்டுமல்லாது, பாடனுபவிப்பது எப்படி என்பதற்கு நமக்கு ஒரு நல்ல மாதிரியை வைத்து அவருடைய வழியை நாமும் பின்பற்றும்பொருட்டு அவர் பாடுகளின் ஊடாய் கடந்துபோனார். அநீதியான உபத்திரவங்களை சகிப்பது எப்படி என்பதை தேவன் நமக்குக் காண்பித்துள்ளார்.*

*கிறிஸ்துவைப் போல அநீதியாய் பாடனுபவித்தவர்கள் யாரும் இருக்க முடியாது.*

***1 பேதுரு 2:22-23, அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. 23. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.***

*நாம் அநியாயமாய் பாடுகளைச் சகித்தாலும் நாம் பூரணரல்ல. அவர் அநியாயமாய் பாடுகளை சகித்தார், ஆனால் அவர் பூரணராயிருந்தார். இது அவருடைய அநீதியான உபத்திரவங்களை இன்னும் கோரமாய் காட்டுகிறது. அவர் ஒரு மாதிரியை முன்வைத்தார்.*

***எது அந்த மாதிரி?***

*பாடனுபவிக்கும்போது, இயேசு எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை.*

***அவர் சிலுவையில் என்ன சொன்னார்?***

*பிதாவே இவர்களுக்கு மன்னியும்.*

*அவர் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்காமல், நியாயமாய் நியாயந்தீர்க்கும், சிலுவையில் நம்முடைய பாவங்களை சுமக்கும் அவரையே அவர் தொடர்ந்து நம்பினார்.*

*பவுல் சொல்லுகிறார்,*

- *நான் கிறிஸ்துவின் சாந்தத்தோடும் தயவோடும் உங்களிடத்திற்கு வருகிறேன்.*
- *நான் நீடிய பொறுமையோடே உங்களிடத்திற்கு வருகிறேன்.*
- *என்பேரில் சொல்லப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் சகித்துக்கொண்டே உங்களிடத்திற்கு வருகிறேன்.*
- *நான் உங்களிடத்திற்கு மென்மையோடு வருகிறேன்.*
- *நான் கோபமில்லாமல், தீமையான எண்ணமில்லாமல் உங்களிடத்திற்கு வருகிறேன்.*
- *நான் பொறுமையோடே உங்களிடத்திற்கு வருகிறேன்.*

*பவுல் தன்னுடைய தேவனுடைய குணாதிசயங்களை முழுவதுமாய் அறிந்துகொண்டார். அவரைப் போலவே இருக்க விரும்புகிறார். எல்லா நல்ல போர்ச்சேவகர்களுக்கும் தேவனுடைய இந்த குணாதிசயமே வரையறை என்பதை அவர் அறிந்திருந்தார்.*

***மத்தேயு 11:29-30, நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். 30. என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.***

*மத்தேயு தன்னுடைய அடுத்த அதிகாரத்திலேயே ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டுகிறார்.*

***மத்தேயு 12:17-21, ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. அவன் உரைத்ததாவது: 18. இதோ, நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன், என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற என்னுடைய நேசன்; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணுவேன், அவர் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார். 19. வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார்; அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில்***

*கேட்பதுமில்லை. 20.* ***அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப்பண்ணுகிறவரைக்கும், நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்.*** *21.* ***அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்பதே.***

*ஏற்கனவே நெரிந்த நாணலாய் இருப்பவர்களை முறிப்பதற்காய் அவர் வரவில்லை. நாணல் புல்லின் சில உபயோகங்களை நாம் பார்க்கமுடியும். ஆனால் தற்போது அவைகள் அந்த காரணங்களுக்காய் பயன்படுத்தப்படுவதில்லை. அவைகள் உபயோகமற்று தூக்கியெறியப்படுகிறது. பழங்காலத்தில் ஒருவேளை அதை புல்லாங்குழலாய் அவர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும்.*

*அதற்கு பின்பதாக மங்கியெரிகிற திரி. அந்த திரி சிறியதாய் இருப்பதாலும், அது தன்னுடைய ஒளியை இழக்கும் தருவாயில் இருப்பதாலும், அது மக்களை எரிச்சலூட்டும். அதைப் பார்ப்பவர்கள் எரிச்சலடைந்து அதைப் பிடுங்கி குப்பையில் போட நினைப்பர்.*

*மேசியா வரும்போது அவர் ஏற்கனவே நெரிந்திருக்கிற நாணலை முறிக்கமாட்டார்; மாறாக, அதை சீர்படுத்துவார்.*

*மங்கியெரிகிற திரியை அவர் ஒருபோதும் அணைக்கமாட்டார், அதை மீண்டும் ஒளிரப்பண்ணுவார்.*

*அதைத் தான் அவர் செய்வார். அவர் மென்மையானவர், தயவுள்ளவர், மன்னிக்கிறவர் மற்றும் இரக்கமுள்ளவர்.*

**யோவான்** *8ஆம் அதிகாரத்தில் விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு ஸ்திரியை அவரிடத்தில் கொண்டுவருகின்றனர். அவர்கள் அவளை இழுத்துக் கொண்டுவந்து இயேசுவுக்கு முன்பாகத் தள்ளி, "இவளை விபச்சாரத்தில் கண்டுபிடித்தோம், அதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டனர்.*

*இயேசு அந்த ஸ்திரியையும் அவர்களையும் ஏற இறங்க பார்த்துவிட்டு, "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று சொன்னார். அவர்களுக்கு குற்ற மனச்சாட்சி தொற்றிக்கொண்டதினால், அங்கிருந்து வந்த வழியே திரும்பிப் போய்விட்டனர்.*

*அவர் அந்த ஸ்திரீயைப் பார்த்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்றார். பழைய ஏற்பாட்டின் நியாப்பிரமாணத்தின்படி உடனடியாய் மரண தண்டனை விதிக்கப்படவேண்டிய இந்த விபச்சார பாவத்திற்கு மகத்தான மன்னிப்பை இயேசு கொடுக்கிறார்.*

*இயேசு மன்னிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். பழைய ஏற்பாட்டில் தன்னுடைய ஜனத்தோடு அவர் போராடி, மீண்டும் மீண்டும் அவர்களை பொறுமையாய் கையாண்டு, அவர்களின் பாவ வாழ்க்கையிலிருந்து அவர்கள் மனந்திரும்புவார்கள் என்று ஆண்டுகளாய் அவர்களை மன்னிப்பதற்காகவே பொறுமையோடே காத்திருந்தார்.*

*கடைசியாய் பாவிகள் மனந்திரும்பி அவரிடத்திற்கு வந்தபோது,* **லூக்கா** *15ஆம் அதிகாரத்தில் மனந்திரும்பிய இளைய குமாரனுக்கு அவனுடைய தகப்பன் அன்பு காண்பித்ததுபோல, தேவனும் தன்னுடைய ஜனத்தை அன்போடு ஏற்றுக்கொண்டார்.*

*மத்தேயு 23ல் மார்க்க தலைவர்களுக்கு விரோதமாக கண்டன வார்த்தைகளை இயேசு கூறுகிறார். ஆனாலும் அவைகளை முடிக்கும்போது, இரக்கமுள்ள இருதயத்தோடு அதை முடிக்கிறார்.*

*மத்தேயு 23:37-39,* ***எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.*** *38.* ***இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்.*** *39.* ***கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.***

*ஒரு உன்னதமான போர்ச்சேவகனாய், சிறந்த போர்ச்சேவகனாய் ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயமெடுக்கப்போகிறவன் இரக்கமுள்ளவனாயிருப்பான்.*

*கொரிந்திய திருச்சபை விசுவாசிகள் பவுலுடைய இரக்க குணத்தை அவருடைய பலவீனமாய் பார்த்தனர். அவருடைய இரக்கம், மென்மையான சுபாவம், பொறுமை, சகிப்புத் தன்மை, தயவு ஆகியவற்றை அவருடைய பலவீனங்களாய் கருதினர்.*

*தன்னுடைய முதலாவது வசனத்தில் பவுல் அதை குறிப்பிடுகிறார்.*

*வச. 1,* ***உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்;கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.***

*அவர்களுடைய குற்றச்சாட்டுகளை அவர் மீண்டும் குறிப்பிடுகிறார். அவர்கள் அவரை பரியாசம் செய்தனர்.*

*2 கொரிந்தியர் 10:10,* ***அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்; சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே.***

*முகத்திற்கு நேராய் அவர் ஒரு கோழை. அந்த பிரச்சனையை சந்திக்கும் தைரியம் அவருக்கு இல்லை.*

*நேருக்கு நேர் சந்திக்கும்போது பவுல் பலவீனமானவர்.*

*அவர்களை நேருக்கு நேர் சந்திக்கும்போது, பவுல் இரக்கமுள்ளவர், மென்மையானவர், மனத்தாழ்மையுள்ளவர்.*

*1 கொரிந்தியர் 2:3,* ***அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்.***

*அவருடைய தாழ்மையின் மீது அவருக்கு உறுதியான நம்பிக்கையில்லை.*

*அவருடைய சொந்த சரீர பெலத்தில் அவருக்கு உறுதியான நம்பிக்கையில்லை.*

*அவருடைய தத்துவங்களின் மீதும், சிந்தையின் மீதும், அறிவின் மீதும், ஞானத்தின் மீதும், அவருக்கு உறுதியான நம்பிக்கையில்லை.*

*அவருடைய அந்த ஆவிக்குரிய குணாதிசயங்களான தாழ்மையையும், சுயத்தை நம்பாத தன்மையையும் அவர்கள் எதிர்மறையாய் புரிந்துகொண்டனர். அவர் ஒரு கோழை என்றும் பெலவீனமானவர் என்றும் அவரை குற்றஞ்சாட்டினார்கள். இவர்கள், மேசியா வெள்ளைக் குதிரையின் மீது ஏறி வந்து அவர்களின் எதிரிகளாகிய ரோமர்களை கொல்லுவார் என்று நம்பியிருந்த கள்ளப் போதகர்களைப் போன்றவர்கள்.*

*இயேசு கழுதையின் மீது ஏறி பட்டணத்திற்குள் வருகிறார். அவர்கள் அவரை கொன்றுபோட்டனர். ஏனென்றால் மேசியா ராஜ அதிகாரத்தோடும் வல்லமையோடும் வருவார் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்தனர்.*

*பவுல் தேவனிடத்திலிருந்து வந்த தெய்வீக அதிகாரத்தைப் பெற்றவராயிருந்திருந்தால், இந்த மாபெரும் அப்போஸ்தலன், இந்த மனத் தாழ்மையை வைத்துக்கொண்டு இங்கு என்ன செய்கிறார்?*

*பவுல் பொறுமையுள்ளவராகவும் இரக்கமுள்ளவராகவும் இருந்தார்.*

*பவுல் கெஞ்சுகிறவராகவும் இருந்தார்.*

*அவர் அவர்களோடு இருந்தபோது வெளிப்பட்ட அவருடைய இரக்க சுபாவம் தவறாய் விளங்கிக்கொள்ளப்பட்டது. அவருடைய தைரியத்தைக் குறித்து அவர்கள் தவறாய் புரிந்துகொண்டனர். அதை வைத்தே அவரைக் குற்றஞ்சாட்டினர். இது மிகவும் தந்திரமான குற்றஞ்சாட்டும் முறை. ஏனென்றால், நீங்கள் என்ன சொன்னாலும் அதற்கு பதிலளிப்பது கடினம்.*

***நீங்கள் உங்களை எப்படி தற்காத்துக்கொள்வீர்கள்?***

*அவர் என்ன பதிலளித்தாலும், அது அவர்களின் குற்றஞ்சாட்டை ஊர்ஜிதம் செய்யக்கூடும்.*

*அவர் பலமானவர் என்று பதில் சொன்னாலும், அவர்கள் "அவருக்கு என குறிப்பிட்ட பலம் இருக்கிறது" என்று சொல்லுவார்கள்.*

*தான் தாழ்மையுள்ளவன் மற்றும் இரக்கமுள்ளவன் என்று அவர்கள் சொன்னால், அவர்கள் அதைக் கொண்டு தங்களுடைய எண்ணத்தை உறுதிப்படுத்தவே நினைப்பர்.*

*ஆகையால் அவர் அதை கவனத்துடன் கையாளவேண்டியுள்ளது. அதையே இந்த பகுதியில் அவர் செய்கிறார். இந்த வேதப்பகுதி பலத்தை பலவீனத்துடன் இணைக்கிறது. அது இரண்டையும் கலக்கிறது. அவருடைய தாழ்மைக்கு மத்தியிலும் அவருடைய வல்லமையைக் குறித்து அவர் பேசுகிறார். உடைக்கப்பட்ட மனுஷீகத்தில் தேவனுடைய வல்லமையைக் குறித்து அவர் பேசுகிறார். மென்மையான ஒரு போர்ச்சேவகனைக் குறித்தும், இரக்கமுள்ள வீரனைக் குறித்தும் அவர் பேசுகிறார்.*

***2. தைரியம்***

*பவுல் இரக்கமுள்ளவர் மட்டுமன்று; அவர் தைரியமானவர்.*

***வச. 2, எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக்குறித்து நான் கண்டிப்பாயிருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.***

*அவர் பெலவீனமானவர் அல்ல.*

*இரக்கத்தில் வெளிப்படுகிற அனைத்து முயற்சிகளும் தணிந்துபோகும்போது,*

*பொறுமையான அனைத்து முயற்சிகளும் ஒதுக்கப்படும்போது,*

*மனந்திரும்பாத கலகக்காரர்களிடமிருந்து சத்தியத்தைப் பாதுகாக்க அவரிடத்தில் இருக்கும் ஒரே காரியம், மரணபரிந்தம் சத்தியத்திற்காய் போராடுவது மட்டுமே.*

*மோதல்களே சத்தியத்தைப் பாதுகாக்கும் என்றால்,*

*மோதல்களே திருச்சபையை பாதுகாக்கும் என்றால்,*

*அவர் யுத்தத்தில் கடுமையாய் போராட வேண்டும்.*

*நீங்கள் கலகத்தை விரும்புகிறீர்கள், அதுவே உங்களுக்குக் கிடைக்கும்.*

*கலாத்தியர் 2ஆம் அதிகாரம் சொல்லுவதுபோல், அவர் பேதுருவையே ஒருமுறை முகமுகமாய் எதிர்த்திருக்கிறார். அவர் கண்டிக்கப்படத்தக்கவர் என்பதினால் நான் பேதுருவையே எதிர்த்தேன். மூத்த அப்போஸ்தலராகிய பேதுருவையே துணிந்துபோய் பவுல் கடிந்துகொண்டார்.*

*இந்த மனிதனுடைய தைரியம் அப்போஸ்தலர் நடபடிகளில் நிறைந்திருக்கிறது. 13 ஆம் அதிகாரத்திலிருந்து துவங்குகிறது.*

- *நீதிமன்றம்,*
- *மாநாடுகள்,*
- *ஆளுநர்கள்,*
- *ராஜாக்கள்,*
- *மார்க்க தலைவர்கள்,*
- *அதிகாரிகள்,*
- *மக்கள் மற்றும்*
- *ஜனத்திரள்*

*ஆகிய எல்லாருக்கும் விரோதமாக தன்னுடைய தைரியத்தை நிருபித்துள்ளார்.*

*அவர் பெலவீனமானவர் அல்ல. இரக்கத்தின் எல்லா முயற்சிகளும் தீர்ந்தபின்பு, அவர் ஆயுதங்களை கையிலெடுக்கிறார்.*

*அவர்கள் மனந்திரும்பும்படிக்கு பவுல் கெஞ்சுகிறார்.*

*மீதமிருக்கிற மற்ற கலகக்காரர்களை மனந்திரும்பும்படிக்கும் சுவிசேஷத்தை நம்பும்படிக்கும் பவுல் கெஞ்சுகிறார். அப்படி மனந்திரும்பினால், அவர் தன்னுடைய தைரியத்தை அவர்களுக்கு வெளிக்காட்ட வேண்டிய அவசியம் இருந்திருக்காது.*

*வேறுவிதமாய் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தைரியத்தை நீங்கள் பார்க்க விரும்பினால், அதைக் காட்டுகிறேன் என்று பவுல் கூறுகிறார். மோதிக்கொள்ளக் கூடிய தைரியம் என்னிலிருந்து வெளிப்படுவதற்கு என்னை வற்புறுத்தாதீர்கள்.*

*தேவைப்படுமாகில் ஒரு யுத்த சிந்தையை தரித்துக்கொள்ள அவர் ஆயத்தமாயிருக்கிறார்.*

*நம்பிக்கை, அதாவது கொள்கை என்று நேரடியாய் அர்த்தங்கொள்ளும் வார்த்தை. எனக்கு கொள்கையிருக்கிறது. எனக்கு உறுதியான கொள்கையிருக்கிறது.*

*பவுல் தன்னுடைய கொள்கைகளில் தைரியமுள்ளவராயிருந்தார்.*

*தைரியமாயிரு என்பதற்கு பயன்படுத்தப்பட்ட இரண்டாவது வார்த்தை "டால்மயோ." அதற்கு துணிச்சலாயிருப்பது என்று அர்த்தம்.*

*விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் பயமின்றி துணிச்சலாய் செயல்படுவது. தன்னுடைய சுய பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல், தன்னுடைய கட்டுபாட்டை மீறி செயல்படுவது.*

*பயமில்லாதிருத்தல். தேவைப்படுமாகில் எந்த விதமான துணிச்சலான செயலையும் செய்வதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்று அவர் சொல்லுகிறார். யுத்தத்திற்கு போவதற்கு தேவையான இராணுவ பலத்தோடும், அச்சமின்றி என்னுடைய வாழ்க்கையை துணிந்து முன் வைக்கிறேன்.*

*இங்கே மென்மையான, இரக்க சுபாவமுள்ள ஓர் போர்ச்சேவகனை நாம் பார்க்க முடிகிறது. ஆனால் யுத்தம் செய்தேயாகவேண்டும் என்று வந்துவிட்டால், அதை முன் வரிசையில் நின்று செய்வதற்கும் ஆயத்தமாயிருக்கிறார்.*

***1 கொரிந்தியர் 4:19, ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப்படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்துகொள்வேன்.***

*நீங்கள் போராட விரும்புனால், அதை செய்வதற்கு அவர் ஆயத்தமாயிருக்கிறார்.*

***2 கொரிந்தியர் 13:10, ஆனதால் இடித்துப்போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி, நான் உங்களிடத்தில் வந்திருக்கும்போது, கண்டிதம் பண்ணாதபடிக்கு, நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்.***

***வச. 2, எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக்குறித்து நான் கண்டிப்பாயிருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.***

*மீந்திருக்கிற கலகக்காரர்கள் இன்னும் திருச்சபையில் தான் இருக்கின்றனர். கள்ளப்போதகர்களும், மௌனமாய் மறைந்திருந்து கலகம் செய்கிறவர்கள் எங்கோ ஒரு மூலையில் இருக்கத்தான் செய்தனர். இவர்கள் சுவிசேஷத்திற்கும் அப்போஸ்தலருக்கும் முன்பாக முடங்காமல், இன்னும் தங்கள் இருதயத்தில் கலக சிந்தை கொண்டிருந்தனர்.*

***அவர்களின் குற்றச்சாட்டு என்ன?***

*அவர்களிடம் காணப்பட்ட அதே காரியங்களை பவுல் மீது குற்றஞ்சுமத்தினர்.*

*அவர் மாம்சத்தில் செயல்படுகிறார்.*

*மாம்சத்தின்படி நடக்கிறார், தன் அன்றாட வாழ்க்கையை மாம்சத்தின் படி வாழுகிறார். மாம்சம் என்பது இன்னும் மீட்கப்படாத மனித தன்மை. இது பாவ சிந்தனைக்கும் பொருமையுள்ள சிந்தைக்கும் இணையாகப் பயன்படுத்தப்படுகிறது.*

*பவுல் பொய்யாய் செயல்படுகிறார், மாம்சத்தில் கிரியை செய்கிறார், அவர் முழுவதும் தன் சுய ஆர்வத்தில் செயல்படுகிறார் என்று மக்கள் சொல்லிக்கொண்டிருந்தனர். கறைபடிந்த சிந்தையினால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார்.*

*அவர் பொய்யானவர் என்று அவர்கள் சொன்னார்கள்.*

*அவர் உள்ளுக்குள் கறைபடிந்தவர், சுயநலவாதி, சுயத்திற்கு ஊழியம் செய்கிறவர், அதிகாரமற்றவர், உலகத்தால் கறைபட்டவர், பண ஆசைகொண்டவர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.*

*அவர் பேராசையினாலும், இச்சையினாலும், ஒழுங்கீனத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளார்.*

*அவர்கள் அவரைப் பற்றி இவைகளைத் தான் சொன்னார்கள். கொடூரமான அவதூறுகள்.*

*தன்னுடைய நிருபத்தின் முதல் ஏழு அதிகாரங்களில், அவர் மீது சுமத்தப்பட்ட இந்த குற்றச்சாட்டுகளுக்கு விரோதமாக பவுல் தொடர்ச்சியாய் வாதாடுகிறார்.*

***2 கொரிந்தியர் 1:12, மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும் விசேஷமாக உங்களிடத்திலேயும், கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று, எங்கள் மனது எங்களுக்குச் சொல்லுஞ்சாட்சியே எங்கள் புகழ்ச்சியாயிருக்கிறது.***

***2 கொரிந்தியர் 2:17, அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்.***

***2 கொரிந்தியர் 4:2, வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.***

***2 கொரிந்தியர் 7:2, எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ்செய்யவில்லை, ஒருவனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும் வஞ்சிக்கவில்லை.***

*பவுல் தன்னை ஏற்கனவே நிருபித்துவிட்டார். ஆனாலும் அவர்களின் சதித்திட்டம் இன்னும் இருந்தது.*

*அவர் உள்ளுக்குள் அழுகியிருக்கிறார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறார்.*

*நான் அங்கு சென்ற பின்பு, அவர்களைத் தான் முதலில் சந்திக்கவேண்டும்.*

*நான் துப்பாக்கி முழக்கத்துடன் உங்களிடத்திற்கு வர விரும்பவில்லை.*

*யுத்தத்திற்கு ஆயத்தமாகி ஆயுதங்களுடன் உங்களிடத்திற்கு வர விரும்பவில்லை.*

*இந்த கலகக்காரர்கள் போகவில்லை அல்லது மனந்திரும்பவில்லை என்றால், நான் அங்கு வரும்போது ஒரு யுத்தம் நடக்கும்.*

*தேவனைப் போலவும் கிறிஸ்துவைப் போலவும் நான் இரக்கமுள்ளவன் என்பதில் மறுப்பில்லை. ஆனால், சத்துரு அவைகளுக்கு அடிபணிய மறுத்தால், அது யுத்தத்திற்கான நேரம்.*